மலர் : 11 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 8

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री

ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**ஜூன் 2011**

| ஆண்டுசந்தா | இந்தியா ரூ.25 | வெளிநாடு ரூ. 250 |
|---|---|---|

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2011 ஜூன்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்.

ஏசாயா 41 : 10

சிங்கப்பூர் பிஷப் ஜோசப் ஜெபமணி அவர்களின் பிரதிஷ்டை 4 பிப்ரவரி 2011 அன்று வெகு சிறப்பாக நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை!




சகோ. P.T.கிறிஸ்டோபர் அவர்கள் பிரதிஷ்டையில் கலந்துகொண்டார்கள்.

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்



**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
மேனேஜிங் டிரஸ்டி



P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்

*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!*

*நம்முடைய இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களை வாழ்த்துகிறேன்.*

*இயேசுகிறிஸ்துவின் பெரிதான கிருபையினால் நம்முடைய TVGM ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்று வருகிறது.*

*சகோ. பி.டி.கிறிஸ்டோபர் அவர்கள் சிங்கப்பூரில் நடைபெற்ற பிஷப் ஜோசப் ஜெபமணி அவர்களின் பிஷப் பிரதிஷ்டை விழாவில் பிப்ரவரி 4ம் தேதி கலந்து கொண்டார்கள்.*

*ஏப்ரல் 14ம் தேதி கன்னியாகுமரி மாவட்டம் - விவேகானந்தபுரத்தில் **"100-கிராம ஊழிய தரிசன முகாம்"** நடத்த கர்த்தர் கிருபை செய்தார். அநேக மக்களுக்கு இந்த முகாம் ஆசீர்வாதமாக இருந்தது.*

*மே 6ம் தேதி அன்று TVGM 32வது ஆண்டு நிறைவு ஸ்தோத்திரக் கூட்டத்தை சிறப்பாக நடத்த தேவன் கிருபை செய்தார். இந்த 33 வது ஆண்டில் TVGM ஊழியங்கள் இன்னும் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கவும், அநேக ஆத்துமாக்களை தேவனுடைய ராஜ்யத்திற்காக ஆதாயப்படுத்தவும், ஆலயமில்லாத அநேக கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்படவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.*

*புதிய கல்வியாண்டிற்குள் நுழையும் உங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறோம்.*

***கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!***

*கிறிஸ்துவின் பணியில்,*

**10.05.2011** *சகோ. ஸ்டீபன் & சகோ. P. T. கிறிஸ்டோபர்.*

# நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்.

சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்

ஏசாயா 41 : 10

இந்த மாதத்தில் கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு காத்திருக்கும் அன்பு சகோதர, சகோதரிகளுக்கு,

கர்த்தர் கூறுகிறார் : **ஏசா. 41 : 10**

**நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்.**

இந்த உலகத்தில் அநேக நேரங்களில் நாம் பலத்துக்காக ஏங்குகிறோம். அது இம்மைக்குரிய பலமாக இருக்கலாம், அதாவது அரசியல் பலமாக இருக்கலாம், அல்லது பொருளாதார பலமாக இருக்கலாம். இந்த உலகத்தின் மக்கள் தங்களின் பணத்தாலும், புகழாலும், அந்தஸ்தாலும் எல்லாவற்றையும் சாதிக்கலாம் என நினைக்கிறார்கள். ஆனால் கர்த்தர் தான் நமக்கு பலன் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உண்மையை யாராலும் மாற்ற முடியாது.

ஆம்! நம்முடைய கர்த்தர் உங்களைப் பலப்படுத்தி எல்லாவித பிரச்சனைகளிலும் உங்களுக்கு சகாயம் பண்ணுவார்.

சங். 46 : 1 "**தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்**".

அநேக நேரங்களில் நாம் பெலவீனமாக காணப்படலாம். நாம் உடைந்துபோன நிலைமையில் காணப்படலாம். ஆனால் அப்படிப்பட்ட நேரங்களில் தேவன் நமக்கு பெலன் தர இருக்கிறார்.

2கொரி. 12 : 9ல் தேவன் கூறுகிறார் :

**என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்.**

நாம் எவ்வளவு அதிகமாக தேவனில் நிலைத்திருக்கிறோமோ அவ்வளவு அதிகமான கனிகளைக் கொடுப்போம் என்று யோவான் 15 : 5 கூறுகிறது.

"**நானே திராட்சை செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது.**"

தேவன் நம்மை பெலப்படுத்துவதாக வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார். ஆகவே நாம் தோல்வியுள்ள வாழ்க்கை வாழ வேண்டிய அவசியமில்லை. நாம் இந்த உலகத்தைப் பற்றிக் கொள்ள விரும்பினால் நாம் தோல்வியடைவோம். ஆனால் எல்லாவற்றிலும் தேவனைச் சார்ந்திருக்கும்போது, நாம் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடியும். தேவனில் பெலன் கொள்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று சங்கீதம் 84 : 5ல் பார்க்கலாம்.

"**உம்மிலே பெலன் கொள்கிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளை கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்.**"

நம்மை பெலப்படுத்துவதே தேவனுடைய நோக்கமாயிருக்கிறது என்பதை சங். 68 : 35ல் பார்க்கலாம்.

**"தேவனே, உமது பரிசுத்த ஸ்தலங்களிலிருந்து பயங்கரமாய் விளங்குகிறீர்; இஸ்ரவேலின் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு பெலனையும் சத்துவத்தையும் அருளுகிறவர்".**

தேவன் தரும் பெலத்தினால் நாம் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று பிலி. 4 : 13ல் வாசிக்கலாம்.

**"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு."**

ஆம்! நாம் தேவனில் பெலப்பட தேவன் விரும்புகிறார்.

**நாம் தேவனிடத்தில் பெலப்பட என்ன செய்ய வேண்டும் ?**

***1. கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும்.***
***2. கர்த்தரைக் கூப்பிட வேண்டும்.***
***3. கர்த்தரை விசுவாசிக்க வேண்டும்.***
***4. பாவத்தை விட்டு விலக வேண்டும்.***
***5. கர்த்தருடைய வார்த்தையில் பெலப்பட வேண்டும்.***

### 1. கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும்:-

முதலாவதாக நாம் பெலனடைய வேண்டுமானால் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும். நாம் எவ்வளவு அதிகமாக கர்த்தருக்குக் காத்திருக்கிறோமோ அவ்வளவு அதிகமாய் அவரின் பெலத்தைப் பெற்றுக் கொள்வோம். ஏசாயா 40 : 31 **"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்."**

### 2. கர்த்தரைக் கூப்பிட வேண்டும்:-

இரண்டாவதாக கர்த்தரைக் கூப்பிட வேண்டும். அநேக நேரங்களில் நமக்குப் பிரச்சனை வரும்போது, இந்த உலகத்திலுள்ள பெலத்தை நாடுகிறோம். ஆனால் நாம் தேவனைக் கூப்பிடும்போது, அவர் நம்மைப் பெலப்படுத்துவார் என்று சங்.138 : 3ல் பார்க்கலாம்.

**"நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர்; என் ஆத்துமாவிலே பெலன் தந்து என்னை தைரியப்படுத்தினீர்."**

### 3. கர்த்தரை விசுவாசிக்கவேண்டும்:-

மூன்றாவதாக நாம் கர்த்தரை விசுவாசிக்க வேண்டும். நாம் அவரை விசுவாசிக்கும்போது, அவருடைய பெலத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று மாற்கு 9 : 23ல் காணலாம்.

**"விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்."**

### 4. பாவத்தை விட்டு விலக வேண்டும்:-

நான்காவதாக நாம் பாவத்தை விட்டு விலக வேண்டும். பாவத்தை விட்டு மனந்திரும்பும்போதுதான் நமக்கு புதுபெலன் கிடைக்கும். தாவீது சங். 31 : 10ல் இவ்வாறு கூறுகிறார் :

**"என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து, என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று."**

ஆகவே நாம் மனந்திரும்பும் போது தான் தெய்வீக பெலத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

***5.கர்த்தருடைய வார்த்தையில் பெலப்பட வேண்டும்:-***

ஐந்தாவதாக நாம் தேவனுடைய வார்த்தையில் பெலப்பட வேண்டும். ஏனென்றால் தேவனுடைய வார்த்தை நம்மை பெலப்படுத்தும் என்று சங்.119:28ல் பார்க்கலாம்.

"**சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்துபோகிறது ; உம்முடைய வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்தும்.**"

தேவன் நம்மை விசுவாசத்திலும், அவரிலும் பெலப்படவும் விரும்புகிறார். ஆனால் அநேக நேரங்களில் நாம் தேவனுடைய சித்தத்தை விட்டு விலகிப் போகிறோம். நாம் அவரைப் பற்றிக் கொண்டு அவர் சித்தத்தை செய்யும்போது, அவர் நமக்கு வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளலாம்.

***பக்தன் பாடுகிறார் :***

**பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே
எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு
பயப்படமாட்டேன்,** (2)
**நான் பயப்படமாட்டேன்,
இயேசு என்னோடு இருப்பதினால்**

ஆம்! இயேசு நம்மோடு இருக்கும்போது, நம்மைப் பெலப்படுத்தி நமக்கு சகாயம் பண்ணுவார். ஆகவே நாம் பயப்பட வேண்டாம். பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள்.

**இயேசு என்னில் வாழ்கிறார்.
அவர் என்னைப் பெலப்படுத்தி,
எனக்கு சகாயம் பண்ணுவார்.
தேவனுக்கே மகிமை!**

## TVGM இம்மானுவேல் சிறுவர் இல்லம் - குண்டல்

குண்டல் சிறுவர் இல்லத்தில் 18 பிள்ளைகள் தங்கி படித்து வருகிறார்கள். அவர்களுக்கு 28.04.2011 அன்று நவலடி **சகோதரி டெய்சி இன்பநாயகம்** அவர்கள் சிறப்பு விருந்தளித்தார்கள்.

24.04.2011 அன்று கூடன்குளம் **சகோ. பிரபு** அவர்கள் சிறப்பு உணவு அளித்தது மட்டுமல்லாமல், 18 பிள்ளைகளுக்கும் மற்றும் சேவையாளர்கள் மூன்று பேருக்கும் துணிமணிகள் வழங்கினார்கள்.

உங்கள் **திருமணநாள், பிறந்தநாள்** அல்லது முக்கிய நிகழ்ச்சி நாட்களில் சிறப்பு உணவு கொடுத்து உதவ விரும்பினால் கீழ்கண்ட தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**திரு. இரத்தினம் ஆசிரியர் –**
போன் : **04637 276306**
**திரு. மனோகர் ஆசிரியர் –**
போன் : **04637 272664,**
செல் : **94864 81522**

## தன்னார்வத் தொண்டர்கள் தேவை

100 – கிராம ஊழியத்தில் அல்லது TVGM தலைமை அலுவலகத்தில் **ஒரு வாரமோ** அல்லது **ஒரு மாதமோ** தன்னால் இயன்ற பணியை செய்ய ஆண், பெண் **தன்னார்வத் தொண்டர்** தேவை. விசேஷமாக "**சிலுவைக்கொடி**" செய்து தருவதற்கும், மாதந்தோறும் பத்திரிகையில் விலாசங்கள் ஒட்டி தருவதற்கும் ஆட்கள் தேவை.

**தங்குமிடம், உணவு இலவசம்.**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

**ஈரோடு மாவட்டம் - கோபிசெட்டிபாளையம் யூனியன்**

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** **2011 ஜுன் 13** திங்கள் காலை 9 மணி முதல் **ஜுன் 17** வெள்ளி இரவு 10 மணி முடிய **கோபிசெட்டிபாளையம் யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் :2011 ஜுன் 13** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2011 ஜுன் 17** வெள்ளி இரவு **7 - 10** மணி

**( 2011 ஜுன் 13 - 17 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM
C/o. I.P.A. **ஜெபவீடு**
**நாகர்பாளையம் ரோடு (கச்சேரிமேடு பஸ் ஸ்டாப்)**
**கோபிசெட்டிபாளையம் - 638 452.**
**ஈரோடு மாவட்டம்.**
**போன் : 04285 - 223507 , செல்: 93450 87262**

உதவி செய்ய முன் வந்த Pastor A. **பெரியநாயகம்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.
**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**
2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 , 94449 80445**

# வேலூர் மாவட்டம் - கணியம்பாடி யூனியன்
# 100 - கிராம ஊழிய அறிக்கை

ஊழியம் நடைபெற்ற தேதி : **04 . 04. 2011 முதல் 08. 04. 2011**

முதல்நாள், கடைசிநாள், கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை பொறுப்பெடுத்து உதவி செய்தவர் : **பாஸ்டர் J. இன்பநாதன்**
**ஏலீம் ஏ.ஜி. சர்ச் , ஓட்டேரி, வேலூர்.**

முதல் நாள் ஜெபத்தில் தேவசெய்தி கொடுத்தவர் : **பாஸ்டர் இன்பநாதன்**

ஊழியம் செய்த கிராம ஊழியர்களின் எண்ணிக்கை : 44 **பேர்**

பிரிக்கப்பட்ட மொத்த குழுக்கள் : 10 **குழுக்கள்**

வழங்கப்பட்ட சுவிசேஷப் புத்தகங்கள் : 10,055 யோவான் சுவிசேஷங்கள்

| | |
|---|---|
| இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள் | : 15,000 |
| மற்ற கைப்பிரதிகள் | : 5000 |
| சிலுவைக்கொடிகள் | : 10,000 |
| புறமதநண்பர்களின் விலாசங்கள் | : 188 |



ஊழியத்தில் கலந்துகொண்ட கிராம ஊழியர்கள் 44 பேர்



பாஸ்டர் J. இன்பநாதன் & அவரது மகன் – வேலூர்.



குழுவாக ஜெபித்தல்



சுவிசேஷம் அறிவித்தல்

# கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 - சகோதரிகள் : லீதியாள், மணியம்மாள், தேவகிருபை, மேரி செல்லாபாய், ஞானசெல்வி.**

நாங்கள் 7 கிராமங்களில் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். ஒரு வயதான தாய், தகப்பன் பிசாசு பிடித்த தன் மகளுக்காக ஜெபிக்கும்படி வேதனையோடு சொன்னார்கள். நாங்கள் ஜெபித்தோம். மொத்தம் 1125 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 - சகோதரிகள் : எஸ்தர் , பிச்சையம்மாள், செல்லக்கனி, எஸ்தர் எபிநேசர்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் எங்களை அன்பாக வரவேற்று, சுவிசேஷப் புத்தகங்களை சந்தோஷத்தோடு வாங்கினார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள்,1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 - சகோதரர்கள் : சிவக்குமார், வினுக்குமார், பாபுசாலமோன், மைக்கில்.**

**நெல்வாய், மூஞ்சூர்பட்டு** கிராமங்களில் ஊழியம் செய்தபோது மக்கள் ஆர்வமுடன் சத்தியத்தைக் கேட்டார்கள். **சப்தலி** கிராமத்தில் ஒரு மனிதர் மதத்தைப் பரப்பாதீர்கள், இந்த கிராமங்களில் யாரிடமும் எதுவும் கொடுக்கக் கூடாது, சொல்லக்கூடாது என தடைசெய்தார். நாங்கள் எங்களால் ஆனமட்டும் அவரை சமாதானப்படுத்த முயற்சித்தோம். ஆனாலும் அவர் எங்களைப் போகவிடாமல் தடைசெய்தார். எங்களுக்கு அந்த கிராமத்தை விட்டு போகவும் மனதில்லை. ஆதலால் அவர் என்ன செய்தாலும் பரவாயில்லை என்று துணிந்து அந்த கிராமத்திற்குள் சென்று சுவிசேஷப் புத்தகங்களை கொடுத்து இயேசுவின் நற்செய்தியை அறிவித்தோம். அந்த மனிதர் அதன்பிறகு எதுவும் சொல்லவில்லை. மொத்தம் 1050 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4 - சகோதரிகள் : மரியம்மாள், கிரேஸ்பத்மா, தேவபாக்கியம், சலோமி சம்மனசு.**

**சிறுகளம்பூர், கேசவபுரம், பெண்ணாத்துார், கருவாட்டுப்பாறை** கிராமங்களில் அலைந்து திரிந்து அநேக மக்களுக்கு சுவிசேஷம் அறிவித்தோம். **கட்டுப்படி** கிராமத்தில் **படுத்த படுக்கை யாயிருந்த ஒரு பெண் ணுக்காக எண்ணெய் பூசி ஜெபித்த போது, அவள் எழுந்து நடக்க ஆரம்பித்தாள்.** இதைப் பார்த்த அந்த பெண்ணின் மகன் இரண்டு பேர் சேர்ந்து என் அம்மாவை துாக்கினாலும் எழுந்திருக்க முடியாது. இப்போது அவர்களாகவே எழுந்து நடப்பது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது என்று சொன்னான். மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 - சகோதரிகள் : லூயிஸ் , அபியேல் அந்தோணியம்மாள், தெபோராள், மார்கிரேட், கிருபா பழனியம்மாள்.**

கணியம்பாடியில் வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். அப்பொழுது ஒருவர் எங்களிடம் ஒரு வாலிபன் மூளைக் கோளாறு உள்ளவனாக மாறிவிட்டான். நீங்கள் சொல்லுகிற இயேசுவால் அவனது மூளைக் கோளாறை சரி செய்ய முடியுமா ? என்று கேட்டார். நாங்கள் வேதத்தில் இயேசு செய்த அற்புதங்களைப் பற்றி எடுத்துச் சொல்லி,

அந்த வாலிபனை இயேசு குணமாக்க முடியும் என்று கூறி கடந்து வந்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 - சகோதரிகள் : கஸ்தூரி, மரியாள், அன்பு ராஜாத்தி, ரூபி.**

**கண்ணமங்கலம்** கிராமத்தில் தங்கி ஊழியம் செய்தோம். ஒரு சிலர் தவிர யாவரும் சுவிசேஷப் புத்தகங்களை சந்தோஷமாக வாங்கினார்கள். வியாதியினால் கஷ்டப்படுகிற பலருக்கு இயேசுவின் அன்பை சொல்லி ஜெபித்தோம். 10 கிராமங்களுக்கும் அதிகமாக வெயிலில் அலைந்து திரிந்து சுவிசேஷத்தைச் சொல்ல கர்த்தர் உதவி செய்தார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 - சகோதரிகள் : லூர்துமேரி, எஸ்தர் கனகாம்புஜம், ஷீலா, அந்தோணிமேரி.**

**ஊசூர்** கிராமத்தை மையமாக வைத்து அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். மூளை வளர்ச்சியில்லாத ஒரு பையனுக்காக ஜெபித்தபோது, அவன் துள்ளிக் குதித்து **இயேசு, இயேசு** என்று சொன்னான். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 - சகோதரிகள் : வசந்தா , அன்னக்கிளி, கிளமெண்ட்ஸ்மேரி, அன்னாள்.**

**விருப்பாச்சிபுரம், வேலப்பாடி, சின்ன சங்கரன்பாளையம், பாகாயம், ஒட்டேரி** கிராமங்களில் சுவிசேஷம் சொன்னபோது மக்கள் ஆர்வமுடன் கேட்டார்கள். 6 வருடமாக பில்லிசூன்யத்தினால் பாதிக்கப்பட்டிருந்தவருக்காகவும், குழந்தையில்லாதவருக்காகவும் ஜெபித்தோம். மொத்தம் 1080 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 - சகோதரர்கள் : யோசுவா, அந்தோணி, செல்வராஜ், ஆபிரகாம், ஜெபராஜ்,**

எங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த 10 கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவித்து, வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம்.யாவரும் வாஞ்சையோடு வாங்கினார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 - சகோதரர்கள் : மனாசே, இஸ்ரவேல் வீமன்,ஜெபமலைநாதன், பீட்டர், மகாராஜன்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் யாவரும் சுவிசேஷப் புத்தகங்களை ஆர்வமுடன் வாங்கினார்கள். பலருக்காக ஜெபித்தோம். எந்த எதிர்ப்புகளும் இல்லை. மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**2011 ஜுன் மாத**
**இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : திருப்பூர்
யூனியன் : அவினாசி
நாள் : 25.06.2011
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் Y. ஜீவதுரை**
**ஏ.ஜி. சர்ச்**
**எம்.ஜி.ஆர். நகர்**
**வாட்டர் டேங் அருகில்**
**அவினாசி மெயின்ரோடு**
**T.M. பூண்டி - 641 652.**
**திருப்பூர் மாவட்டம்.**
**செல் : 9994336841**

ஜெபியுங்கள் !　　பங்கு பெறுங்கள் !

## TVGM 100கிராம ஊழிய தரிசன முகாம் மற்றும் கூட்ட விபரங்கள்

**நாள் :** 2011 ஜுன்10 வெள்ளி காலை 10 முதல் 2 வரை
Sis.பொன்சீலி சாமுவேல், இம்மானுவேல் ஜெபவீடு, இடையன்விளை
வெள்ளி இரவு 9 – 1 ( முழு இரவு ஜெபம் ) C.S.I.சபை, நெய்விளை.

### தரிசன முகாம்

**நாள் :** 2011 ஜுன் 11 சனி காலை 9 முதல் 2 மணி
C.S.I.சபை வளாகம், **நெய்விளை**, தூத்துக்குடி மாவட்டம்.

### தரிசன செய்தி

**சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர் TVGM & TASOL - CEO**
**சகோ. P.T. கிறிஸ்டோபர் TVGM ஸ்தாபகர்**

**சாட்சி : சகோதரி ஷோபனா** , **ஒருங்கிணைப்பாளர்**
( TVGM **அறிமுகப்பணி – நாகர்கோவில்** )

**சகோ. G. எட்வர்ட் – நெய்விளை , சகோ. ஞானராஜ் – புன்னையடி**
**குடும்பமாக வாருங்கள் என அன்புடன் அழைக்கிறோம்!**

| உள்ளூர் தொடர்புகளுக்கு : | TVGM தலைமை அலுவலகம் |
| --- | --- |
| சகோ. ஞானராஜ் – 94441 76685 | ஸ்டீபன் கிறிஸ்டோபர் – 94435 44628 |

**கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்.**
வெளி 14 : 13

## வருந்துகிறோம் !

2011 ஜனவரி மாதம் 100– கிராம ஊழியர்களான **சகோ. தாவீது** ( வள்ளியூர் ) அவர்களும், 2011 ஏப்ரல் மாதம் **சகோதரி கிரேஸ்பத்மா** ( மல்லாங்கிணறு) அவர்களும், 2010ம் ஆண்டில் **சகோதரி ஞானசெல்வம்** ( மதுரை ) அவர்களும் கர்த்தருக்குள் மரித்தார்கள். இவர்களது குடும்பத்தினருக்கு கர்த்தர் தாமே ஆறுதலைக் கட்டளையிடுவாராக.

வள்ளியூர் தாவீது அவர்களின் மனைவி **தொடர்ந்து 100–கிராம ஊழியங்களில் கலந்து கொள்கிறார்கள்.** தேவனைத் துதியுங்கள்.

சகோதரி கிரேஸ் பத்மா எப்பொழுதும் சிரித்த முகத்தோடு ஊழியத்திலும், ஜெபத்திலும், வரிசையிலும் முன்னோடியாய் நிற்பார்கள்.

**சகோதரி ஞானசெல்வம்** தன்னுடைய வயதான, நோய் வாய்ப்பட்ட நேரத்திலும் மதுரையில் வீடுவீடாக சென்று காணிக்கைகள் சேகரித்து அனுப்பி வைப்பார்கள். இவர்களது மரணம் TVGM–க்கு மாபெரும் இழப்பு. இந்த **இடத்தை நிரப்ப ஒரு கர்த்தருடைய பிள்ளை எழும்ப ஜெபியுங்கள்.**

## ஜெபத்தைக் கேட்டு தேவன் செய்த அற்புதங்களில் சில

### சகோதரி மல்லிகா, அவனிகோனேந்தல்

எனக்கும், என் மூத்த மகனுக்கும் நான்கு நாட்களாக மனவருத்தம் இருந்தது. இரவில் மிகுந்த கண்ணீரோடு 100 – கிராம ஊழியத்திற்கு சாட்சி எழுதுவேன் என பொருத்தனை செய்து ஜெபித்தேன். மறுநாளே இருவரும் சமாதானமாகி விட்டோம். இப்பொழுது மகன் முன்புபோல் சகஜமாக பேசுகிறான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

### சகோ. அண்ணாமலை, புதுகை

எனக்கு வேலை கிடைக்கும்படி ஜெபிக்க தங்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன். வேலை கிடைத்தவுடன் சாட்சி எழுதி, ரூ. 500/– காணிக்கையும் அனுப்புவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். அதன்படி வேலை கிடைத்தது. ரூ. 500/–காணிக்கை அனுப்பியுள்ளேன்.

### சகோதரி ஜோதீஸ்வரி, சேலம்.

நான் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் வெற்றி பெற வேண்டுமென சென்ற கடிதத்தில் எழுதியிருந்தேன். அதே போல் கர்த்தரின் கிருபையால் நான் வெற்றி பெற்று நல்ல கல்லூரியில் படித்து வருகிறேன்.

### சகோதரி சுகி ராஜா, நெய்யூர்.

என்னுடைய சித்தப்பா மகளுக்கு சுகபிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்திற்கு பின் அவளுக்கு அதிகமான இரத்தப் போக்கு ஏற்பட்டது. மருத்துவர்கள் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் கர்ப்பபையை அகற்ற வேண்டும் என்று கூறினார்கள். அப்பொழுது நான் அவளுக்கு எந்த சேதமும் வராதபடி காத்துக் கொள்ளும் இயேசப்பா, 100–கிராம ஊழிய பத்திரிக்கையில் சாட்சி எழுதுவேன் என பொருத்தனை செய்து ஜெபித்தேன். ஜெபத்தைக் கேட்ட தேவன் ஆப்ரேஷன் நல்லபடியாக முடிய கிருபை செய்தார். தாயும் பிள்ளையுமாக வீட்டிற்கு வர கிருபை செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

### TVGM அறிமுகப்பணிக்கு TVS 50 தேவை
**விலை ரூ. 30,000/-**

குண்டல் TVGM சிறுவர் இல்ல மேனேஜர் திரு. இரத்தினம் ஆசிரியர் அவர்களின் பெரும் முயற்சியினால் TVS 50 வாங்க இதுவரை ரூ. 15,500 சேகரிக்க கர்த்தர் கிருபை செய்தார். இன்னும் தேவைப்படும் மீதிப் பணம் ரூ.14,500 – ஐ தேவன் அற்புதமாக சந்திக்க ஜெபியுங்கள்.

# கன்னியாகுமரி மாவட்ட
# TVGM அறிமுகப்பணி அலுவலகம்
# 2011 ஏப்ரல் மாத ஊழிய அறிக்கை

அறிமுகப்பணி அலுவலக ஊழியர்கள்



கர்த்தருடைய கிருபையினால் ஏப்ரல் மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றது. **எப்ரல் 14**ம் தேதி கன்னியாகுமரி YMCA ல் **"100–கிராம ஊழிய தரிசன முகாம்"** ஆசீர்வாதமாக நடைபெற்றது. 15 ஜெப பங்காளர்களை கர்த்தர் எழுப்பி தந்தார்.

தரிசன விளக்கத்தை **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்** அவர்களும், தரிசனசெய்தியை ஸ்தாபகர் **சகோ. P.T. கிறிஸ்டோபர்** அவர்களும் மிக நேர்த்தியாகக் கொடுத்தார்கள். யாவருக்கும் மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. தரிசனமுகாம் பாடல், ஆராதனை நடத்தி, இசைக்குழுவை அழைத்து, தமக்கு சொந்தமான P.A. System கொண்டு வந்து வைத்து யாவற்றையும் நேர்த்தியாக நடத்த உதவி செய்த **Rev. பிரசாத்** மற்றும் உடன் சகோதரர்கள், **சகோ. டென்னிஸ், சகோ. கிப்ட்சன்** யாவரையும் கர்த்தர்தாமே ஆசீர்வதிப்பாராக.

மேலும் கர்த்தருடைய ஊழியத்தை செய்து வரும் **சகோ. பெனில், சகோ.பால் நேசமணி, Rev. பிரைட் வேதமாணிக்கம், சகோ. கிறிஸ்டோபர் செல்வராஜ்** இவர்கள் யாவரும் குடும்பத்துடன் கலந்துகொண்டு முகாமை சிறப்பித்தது எங்களுக்கு மிகவும் சந்தோஷமாகவும், ஆசீர்வாதமாகவும் இருந்தது.

**ஏப்ரல் 17**ம் தேதி **தேவிகோடு சி.எஸ்.ஐ.** சபையில் அறிமுகப் பணி செய்ய கர்த்தர் வழியை திறந்தார். **சகோ. P.T. கிறிஸ்டோபர்** அவர்கள் **குருத்தோலை ஞாயிறு** அன்று தேவசெய்தி கொடுத்தார்கள்.

**சுபாஷ்நகர்** பகுதியில் சுவிசேஷத்திற்கு வாஞ்சையாய் காத்திருக்கும் ஆத்துமாக்களை சந்தித்து 100 வீடுகளில் சுவிசேஷப் பணி செய்ய அலுவலக சகோதரிகளுக்கு கர்த்தர் கிருபை செய்தார். வாரந்தோறும் நடைபெறும் சுவிசேஷ ஊழியமும், **தேரூர், தாணுமாலையான்புதூர்** மற்றும் **நல்லூரை** சுற்றியுள்ள **வடலிவிளை, பட்டகசாலியன்விளை** பகுதிகளிலும் தடையின்றி நடைபெற கர்த்தர் உதவி செய்தார். **தேவனுக்கே மகிமை!**


கிறிஸ்துவின் பணியில்,
N. **ஷோபனா இவான்சலின்.**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

# ஜெபிக்க சில வழிமுறைகள்

**[ சகோதரி பெர்சிஸ் ஸ்டீபன் ]**

## தினசரி ஜெபம் உங்கள் பாரங்களை நீக்கி விடும்

தேவனோடு தொடர்பு கொள்வதற்கு ஜெபம் மிகவும் அவசியமானது. நம்முடைய தேவைகளை ஜெபத்தின் மூலம் தேவனிடத்தில் தெரியப்படுத்தலாம், பாவங்களை அறிக்கையிடலாம், அவரை துதித்து ஸ்தோத்தரிக்கலாம்.

நாம் ஜெபிக்கும்போது உலகத்தை சார்ந்திராமல், தேவனையே சார்ந்திருக்கிறோம். அப்படி தேவனையே சார்ந்து ஜெபிக்கும் ஜெபம் மிகவும் வல்லமையுள்ளது. ஏனென்றால் அந்த ஜெபத்திற்கு தேவனே பதிலளிக்க கடமைப் பட்டுள்ளார். ஆதலால் ஜெபம் ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்விலும் மிகவும் அவசியமாயிருக்கிறது.

அநேகர் நினைப்பதுபோல், ஜெபம் ஒரு வழி தொடர்பு அல்ல. அது தேவனையும், மனிதனையும் இணைக்கும் இருவழி தொடர்பு ஆகும். தேவன் நமக்கு உதவி செய்யவும், நம்முடைய வாழ்வில் ஈடுபாடு கொள்ளவும் ஜெபம் உதவுகிறது. நாம் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று வேதத்திலிருந்து பார்ப்போம்.

### நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் ?

**1. விசுவாசத்தோடே ஜெபிக்க வேண்டும் :** தேவன் விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது நிச்சயமாக பதில் தருகிறார். அநேக நேரங்களில் நாம் இருதயங்களிலிருந்து ஜெபிப்பதில்லை. நாம் தேவனிடத்தில் விசுவாசமில்லாமல் ஏதோ ஜெபிக்கிறோம். நாம் தேவனிடத்தில் முழுமையாக விசுவாசம் வைத்திராமல் இருப்பதினால் நம்முடைய ஜெபத்தின்மீது நமக்கே சந்தேகம் வருகிறது. ஆனால் இயேசுகிறிஸ்து மத்தேயு 21 : 22ல் இவ்வாறு கூறுகிறார் "**மேலும் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்தில் எவைகளை கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்.**"

விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளிகளை எழுப்பி, நம்முடைய கட்டுகளிலிருந்து நம்மை விடுதலையாக்கும். யாக் 5 : 15 "**விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்.**"

காத் கோத்திரத்தார் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்து விண்ணப்பம் செய்ததால் தேவன் அவர்களுக்கு வெற்றியை கொடுத்ததாக 1 நாளாகமம் 5: 20ல் பார்க்கலாம். "அவர்களோடே ( காத்தியரோடே) எதிர்க்க துணை பெற்றபடியினால், ஆகாரியரும் இவர்களோடிருக்கிற யாவரும் அவர்கள் கையில் ஒப்புக் கொடுக்கப் பட்டார்கள்; அவர்கள் யுத்தத்திலே தேவனை நோக்கிக் கூப்பிட்டு, **அவர் மேல் நம்பிக்கை வைத்தபடியினால்** அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார்".

நம் ஜெபங்களுக்கு பதில் கிடைக்காததற்கு காரணம் நாம் தேவனிடத்தில் வைத்திருக்கும் விசுவாச குறைவாக இருக்கலாம்.

**2. தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து ஜெபிக்க வேண்டும் :**

நம்முடைய ஜெபங்களில் நாம் தேவனுடைய சித்தத்தை நாட வேண்டும். அநேக நேரங்களில் நம்முடைய சித்தம் மட்டுமே நடக்க வேண்டுமென்று விரும்புகிறோம். நம்முடைய வழிகளும் யோசனைகளும் மிக சிறந்ததாக இருக்கிறது என்று எண்ணி தேவனுடைய சித்தத்தை நாடாமல் போய் விடுகிறோம்.

தேவனுடைய சித்தத்தை நாடாமல் ஜெபிக்கும் ஜெபம் கேட்கப்படாது என்று பின்வரும் வசனங்களில் காண்கிறோம். யாக். 4 : 3 இவ்வாறு கூறுகிறது : **"நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்**" இதைப் போன்று 1யோவான் 5 : 14 "**நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்கு செவிக்கொடுக்கிறார் என்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்**" என்று வாசிக்கிறோம். மத்தேயு 6 : 10ல் இயேசுகிறிஸ்து நமக்கு ஜெபிக்க கற்றுக் கொடுக்கிறார். "**உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக**" இயேசுகிறிஸ்து தேவனுடைய சித்தத்திற்கு அவரை ஒப்புக்கொடுத்தார் என்பதை அவர் கெத்சமெனே தோட்டத்தில் ஜெபிக்கிறதிலிருந்து நாம் அறியலாம். லூாக்.22:42 "**பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது** " என்று ஜெபிப்பதை பார்க்கலாம்.

நம்முடைய ஜெபம் தாவீதின் ஜெபத்தைப் போல காணப்பட வேண்டும். சங்.143:10ல் "**உமக்குப் பிரியமானதை செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னை செம்மையான வழியிலே நடத்துவாராக**". நாம் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கும்போது, தேவன் நம்முடைய வாழ்க்கையில் அநேக அற்புதங்களைக் காணச் செய்வார். தேவன் ஒரு வழியை அடைக்கும்போது, அதை விட சிறந்த மற்றொரு வழியை திறக்க வல்லவராயிருக்கிறார். உங்களுடைய யோசனைகளின்படி சூழ்நிலைகள் காணப்படாவிட்டால், சோர்ந்துபோகாதீர்கள். தேவனுடைய சித்தம் உங்களுடைய வாழ்வில் நிறைவேறுகிறதை குறித்து மகிழ்ச்சியடையுங்கள்.

அநேக நேரங்களில் நாம் ஏதொவொரு பொருளையோ அல்லது நபரையோ வைத்துக்கொள்ள ஆசைப்படும்போது அவற்றை நம்முடைய வாழ்க்கையில் இழக்க நேரிடுகிறது. ஆதலால் நம்முடைய எல்லா முடிவுகளை தேவனுடைய கரங்களில் கொடுக்கும்போது, நாம் எந்தவொரு இழப்பையும் சந்திக்க அவர் விடமாட்டார். சங்.121:3 "**உன் காலை தள்ளாடவொட்டார் உன்னைக் காக்கிறவர் உறங்கார்.** " என்ற வசனத்தை நாம் மறந்து விடக் கூடாது.

**3. தாழ்மையோடு ஜெபிக்க வேண்டும் :** நாம் தேவனிடத்தில் தாழ்மையோடு ஜெபிக்க வேண்டும். தேவன் தாழ்மையுள்ள மனிதனை நேசிக்கிறார். அவர் பெருமையுள்ளவனை வெறுக்கிறார். யாக். 4 : 10 இவ்வாறு கூறுகிறது: "**கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்**".

நாம் பரிசேயர், ஆயக்காரருடைய உவமையை பார்க்கும்போது, ஆயக்காரன் தன்னைத்தான் தாழ்த்தி, தேவனுக்கு முன்பாக ஒரு பாவியாக அறிக்கையிடுகிறான். ஆனால் பரிசேயனோ தன்னை நியாயப்படுத்திக் கொள்கிறதை லூாக்கா 18 : 9 – 14ல் பார்க்கலாம். ஏனெனில் "தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ

அவன் உயர்த்தப்படுவான்'' என்று இயேசு கூறுவதை பார்க்கலாம்.

நம்மை நாம் தாழ்த்தும்போது ஐசுவரியத்தையும் மகிமையையும் தேவன் நமக்கு பலனாக தருகிறார். இதை நீதி. 22 : 4ல் "**தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்.** " நீதி.29:23ல் "**மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்; மனத் தாழ்மையுள்ளவன்எவனோ கனமடைவான்** " என்று பார்க்கிறோம்.

ஆதலால் நம்முடைய அந்தஸ்தையோ, அதிகாரத்தையோ, படிப்பையோ பொருட்படுத்தாமல் நம்மை நாமே தேவனுக்கு முன்பாக தாழ்த்த வேண்டும். அப்பொழுது நம்முடைய ஜெபங்களுக்கு பதிலை பெற்றுக் கொள்வோம்.

**4. நன்றியோடு ஜெபிக்க வேண்டும் :** நம்முடைய ஜெபங்களில் நாம் தேவனிடத்தில் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். அநேக சமயங்களில் நம்முடைய வேலைகளின் மத்தியிலே தேவன் நமக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களை எண்ணி அவருக்கு நன்றி செலுத்த மறந்து விடுகிறோம். சங். 77 : 11ல் தாவீது இவ்வாறு கூறுகிறார் : "**கர்த்தருடைய செயல்களை நினைவுகூருகிறேன், உம்முடைய பூர்வகாலத்து அதிசயங்களையே நினைவுகூருவேன்.**" நாம் ஒவ்வொரு நாளும் தேவன் தந்த ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்க கடமைப்பட்டுள்ளோம். ஏனென்றால் அவர் நம்மை நேசித்து நமக்காக தமது ஜீவனை கொடுத்திருக்கிறார்.

பிலி. 4 : 6 ல் பவுல் இவ்வாறு கூறுகிறார் "**நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்**". அமெரிக்காவில் இருக்கும் மக்கள் நன்றி செலுத்தும் தினம் என்று ஒரு நாளை ஒவ்வொரு வருடமும் அனுசரிக்கின்றனர். இந்தியாவில் நாம் சேர்ப்பின் பண்டிகை என்று கொண்டாடுகிறோம். அந்த நாளில் தேவன் செய்த கிருபைகளுக்காக அவருக்கு நம்முடைய சிறந்த காணிக்கையை படைப்போம். அந்த ஒரு நாள் மட்டுமல்ல, நாம் தினமும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறவர்களாக காணப்பட வேண்டும். எபே. 5 : 20ல் இவ்வாறு வாசிக்கலாம். "**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து . . .** " ஆதலால் நம்முடைய ஜெபங்களில் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஏனென்றால் அவர் நம்முடைய ஸ்தோத்திரத்துக்கும், நன்றிக்கும் பாத்திரராயிருக்கிறார்.

நம்முடைய ஜெபத்தைக் கேட்பதில் தேவன் ஒருபோதும் சோர்ந்து போகிறதில்லை. அவர் நம்முடைய எல்லா ஜெபங்களையும் கவனமாக கேட்டு நமக்கு பதில் அளிக்கிறவராயிருக்கிறார். அவர் நம் அருகே நின்று நமது ஜெபங்களுக்கு பதில் தர காத்திருக்கிறார். நாம் எப்படி அவருடைய ஆசீர்வாதங்களை ஜெபித்து பெற்றுக் கொள்ளப் போகிறோம். அவரிடத்தில் விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும், அவருடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து ஜெபிக்க வேண்டும், தாழ்மையோடு ஜெபிக்க வேண்டும், நன்றி சொல்லி ஜெபிக்க வேண்டும்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து உங்கள் ஜெபங்களுக்கு பதில் அளிப்பாராக!

**தேவனுக்கே மகிமை!**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக்.** 5:16

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள்:*** இந்த ஆண்டில் **'இயேசுவுக்கு சாட்சிகள்'** என்ற தலைப்பில் T.V. நிகழ்ச்சிகள் வெளிவர ஜெபியுங்கள். 100–கிராமஊழியர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரின் இரட்சிப்பின் சாட்சிகள், திருப்பு முனைகள் வெளி வர ஜெபியுங்கள்.

***செவ்வாய்:*** மாதம் இரண்டு முறை 100–கிராமஊழியம் நடைபெறவும், அதற்காக தரிசனம் பெற்ற நபர்களை தேவன் கொடுக்கவும் ஜெபியுங்கள்.

ஒருமுறை "100–கிராம ஊழியம்" நடத்துவதற்கு ரூ. 50,000/– தேவைப் படுகிறது. பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். இந்த ஊழியத்தின் மூலம் சந்திக்கப்படும் ஒவ்வொரு நபரும் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள ஜெபியுங்கள்.

***புதன் :*** திருச்சியிலுள்ள **ஏலீம்** சிறுவர் இல்லத்தில் கழிவறை மற்றும் குளியலரை தளம் போட்டு முடிக்கப் படவும், இன்னும் சமையலறை, Store room, படிக்கும் அறைகள் கட்டுவதற்கு கொடுக்கக்கூடிய தகுந்த நபர்களை தேவன் எழும்பும் படியாக ஜெபியுங்கள். புதிய கல்வியாண்டில் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு தேவன் ஞானத்தை கொடுக்கும்படி ஜெபியுங்கள்.

***வியாழன் :*** 2010 – 2011 TVGM & TASOL வருடாந்திர கணக்குகள் இந்த மாதத்திலாவது தணிக்கை செய்யப்பட்டு அரசாங்க அலுவலகங் களுக்கு சமர்ப்பிக்கப்பட ஜெபியுங்கள்.

***வெள்ளி :*** TVGM Trust க்கு நிரந்தர FCRA ஆர்டர் கிடைக்கவும், சிறுவர் இல்லத்திற்கு சமூக சேவை ஆர்டர் கிடைக்கவும், TASOL நிலத்திற்கு பட்டா ஆர்டர்கள் கிடைக்கவும், அரசாங்க அதிகாரிகளின் கண்களில் தயை கிடைக்கவும் ஜெபியுங்கள்.

***சனி :*** .TVGM & TASOL ஊழியங் களுக்கு Accounts, Computer டிபார்ட்மெண்டுக்கு ஆவிக்குரிய மற்றும் தாலந்துகளுள்ள நபர்கள் கிடைக்க ஜெபியுங்கள். தலைமை அலுவலகம், கிளை அலுவலக ஊழியர்களுக்கு தேவன் உற்சாக ஆவியை தந்து ஊழியத்தை இன்னும் வல்லமையாய் செய்ய ஜெபியுங்கள்.

***ஞாயிறு :*** TVGM & TASOL ஊழியங்களுக்காக ஜெபிக்கிற, கொடுக்கிற யாவரையும் தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள். TVGM நிர்வாக கமிட்டியினரையும், பொது உறுப்பினர்களையும் தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**TVGM தலைமை அலுவலக முகவரி**
**BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.**
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**1OO-VILLAGE,**
**Veeranginallur Road,**
**SOMARASAMPETTAI ( Hospital Stop)**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**
**Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445 Email : 100village@tvgm.org**
**Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628**

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு**
**டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர்,** M.O **அனுப்ப வேண்டிய முறை**

**1.TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)
**2. T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

பின்னும் 2 Trust களுக்கு மட்டும் 80G வரி விலக்கு உண்டு.

**1. T.V.G.M. SOCIAL SERVICE** சிறுவர் இல்லம், ஏழை, எளியவர்கள் உதவி
**2. TASOL (** நிலம் வாங்குவதற்கும் மற்றும் கல்வி நிதி )

குறிப்பு :**Bank Account** நம்பர் தேவைப்பட்டால் தயவுசெய்து உங்கள் நோக்கத்தை குறிப்பிட்டு எங்களுக்கு ஈமெயில் / தபால் எழுதவும்.

**குறிப்பு :Bank To Bank அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கை அனுப்புவதின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.**

**Website : www.tvgm.org**

தினசரி வாக்குத்தத்தம், மாதாந்திர வாக்குத்தத்த செய்தி
,**'100 கிராம ஊழியம்'** அனுபவ சாட்சிகள்,
TVGM Documentary, TVGM சிலுவைக்கொடி பாடல்கள்,
மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகிறது.
**தவறாமல் பாருங்கள் ! ஜெபியுங்கள் !**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER **R.N.I. Number : TNMUL / 2000 / 4011**
**HUNDRED VILLAGE MINISTRY** ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
**POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011**
**Posting Date 25th at H.P.O. Trichy.**



**Elim Revival Church ,**
34ACuff Road, Little India - Singapore
பாஸ்டர் **டேனியல்**, சகோதரி **ஷீலா,**
சபை உறுப்பினர்கள் 20 பேர்
**சகோதரி எட்வினா ஜோப்**
***Christian Care Centre*** மற்றும்
TVGM ஸ்தாபகர் **சகோ. P.T.**
**கிறிஸ்டோபர்** ஆகியோர்
இணைந்து ஜெபநடை சென்றார்கள்.





20.04.2011 அன்று **சகோ. P.T. கிறிஸ்டோபர்** அவர்கள் பரமத்தியில் நடைபெற்ற முழுஇரவு ஜெபத்தில் தேவசெய்தி வழங்கினார்கள்.

**நன்றி :** பாஸ்டர் **தீமோத்தேயு** – வேலூார், **சகோதரி ரூபி ஆபிரகாம்–** SG

**To**

**Return Requested:** TVGM ,
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.